Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 17 of 2021**

**Deposition of P.W.1 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : **திருமதி.கலா** | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 4th day of September 2024.

(Accused absent. For Accused, petition U/s.317 Cr.P.C is filed and allowed.)

**முதல்நிலை விசாரணை**:

நான் தற்போது மோகனூர் வட்டம், கே.புளியம்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 2015 ஆண்டு நான் குட்டலாம்பாறை கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது 25.1.2015ந் தேதி இரவு சுமார் 8.40 மணியளவில் கிராம உதவியாளர் சக்திவேல் எனக்கு தொலைபேசி வாயிலாக பாலப்பட்டி டு வள்ளிபுரம் செல்லும் வழியில் புதுப்பாளையம் கொங்கு வேபிரிட்ஜ்க்கு எதிர்புறம் உள்ள வெண்ணிலா என்பவருக்கு சொந்தமான இடத்தில் துறையூரை சேர்ந்த சஞ்சீவி நாயுடு மகன் சக்கரபாணி என்பவர் 2 வருடமாக டிபன் கடை வைத்துள்ள நிலையில் அவர் அன்று இரவு சுமார் 8.15 மணியளவில் கடையில் வீட்டு சிலிண்டரிலிருந்து கடை சிலிண்டருக்கு கேஸ் மாற்றிய நிலையில் சிலிண்டரை அப்படியே வைத்துவிட்டு அவர் கடையை பூட்டிவிட்டு புதுப்பாளையத்தில் உள்ள அவரது வீட்டிற்கு சென்று விட்டார் என்றும், அவர் செல்லும் போது கடைக்கு வெளியில் உள்ள பெஞ்சில் வள்ளியப்பம்பட்டியை சேர்ந்த பெரியாகவுண்டர் மகன் கருப்பண்ணன் அதே ஊரை சேர்ந்த வீரப்பன் மகன் பெரியாகவுண்டர் மற்றும் பேளுக்குறிச்சி வெட்டுக்காட்டை சேர்ந்த வரதன் மகன் குப்புசாமி ஆகிய மூன்று பேரும் அமர்ந்திருந்தார்கள் என்றும், அப்போது கரண்ட் ஆப் ஆகிவிட்டு கரண்ட் திரும்ப வந்த போது கடைக்குள் கேஸ் மாற்றிய நிலையில் இருந்த சிலிண்டரிலிருந்து கேஸ் கசிவின் காரணமாகவும் மின் கசிவு காரணமாகவும் கடையின் உட்புறமாக சிலிண்டர் வெடித்து சிதறியதில் வெளியில் இருந்த மூன்று பேரும் இறந்து விட்டனர் என்றும் தெரிவித்தார். தகவல் தெரிந்தவுடன் உடனடியாக நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்த போது மூன்று பேரும் இறந்து இருந்தனர். கடையும் இடிந்து விட்டது. பிறகு அங்கு இருந்தவர்களிடம் விசாரணை செய்த போது கடைக்காரர் சக்கரபாணி என்பவர் வீட்டு சிலிண்டரிலிருந்து கடை சிலிண்டருக்கு கேஸ் மாற்றிய நிலையில் அப்படியே வைத்துவிட்டு அவருடைய வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றும், கேஸ் மாற்றினால் கேஸ் கசிந்து தீ விபத்து ஏற்பட்டு உயிர் சேதம் ஏற்படும் என்று தெரிந்த நிலையிலும் அவர் சிலிண்டர் மாற்றிய

நிலையில் அப்படியே வைத்து விட்டு சென்று விட்டார். அப்போது கரண்ட் ஆப் ஆகி திரும்ப வந்தவுடன் கேஸ் கசிவின் காரணமாக சிலிண்டர் வெடித்து சிதறியதில் மூன்று பேரும் இறந்து விட்டனர் என்று தெரிவித்தனர். பிறகு நான் பரமத்தி காவல் நிலையம் சென்று எழுத்து மூலமாக புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் அ.சா.ஆ.1 (அ.சா.1) ஆகும். மறுநாள் காவல் ஆய்வாளர் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை **:**

சம்பவம் குறித்து எனக்கு 8.40 மணிக்கு தகவல் கிடைத்தது. சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. சம்பவ இடத்தில் நான் யாரை எல்லாம் விசாரித்தேன் என்று பெயர் விலாசம் சொல்ல முடியாது. சம்பவ இடத்திற்கு நான் 9.00 மணிக்கு சென்றேன். சம்பவ இடத்திற்கு நான் அங்கு இருக்கும் போது போலீசார் அங்கு வரவில்லை. நான் சம்பவ இடத்தில் 10.45 மணி வரை இருந்தேன். நான் போகும் போது சம்பவ இடத்தில் சுமார் 50 பேர் கும்பலாக இருந்தார்கள். நான் பரமத்தி காவல் நிலையத்திற்கு செல்லும் போது 11.30 மணி இருக்கும். புகாரை காவல் நிலையத்தில் வைத்து தான் எழுதிக் கொடுத்தேன். புகார் கொடுப்பதற்கு முன்பு போலீசாரிடம் நடந்த விபரத்தை சொன்னேன். போலீசாரின் ஆலோசனையின் பேரில் புகார் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவம் பற்றி எனது மேல் அதிகாரிகளுக்கு சம்பவத்தன்று தகவல் சொன்னேன். புகார் கொடுத்தன்று காவல் நிலையத்தில் 1 மணி நேரம் இருந்தேன். மறுநாள் போலீசார் என்னை விசாரித்தார்கள். அதன்பிறகு என்னை விசாரிக்கவில்லை.

மறு விசாரணை : இல்லை.

Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 17 of 2021**

**Deposition of P.W.2 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : **திரு.சக்திவேல்** | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 4th day of September 2024.

(Accused absent. For Accused, petition U/s.317 Cr.P.C is filed and allowed.)

**முதல்நிலை விசாரணை**:

நான் தற்போது மோகனூர் வட்டம், குட்டலாம்பாறை கிராமத்தில் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். 2015 ஆண்டு நான் குட்டலாம்பாறை கிராம உதவியாளராக பணிபுரிந்த போது 25.1.2015ந் தேதி இரவு சுமார் 8.30 மணிக்கு ஊர்மக்கள் போன் மூலம் என்னிடம் பாலப்பட்டி டு வள்ளிபுரம் செல்லும் வழியில் புதுப்பாளையம் கொங்கு வேபிரிட்ஜ்க்கு எதிர்புறம் உள்ள வெண்ணிலா என்பவருக்கு சொந்தமான கட்டிடத்தில் துறையூரை சேர்ந்த சஞ்சீவி நாயுடு மகன் சக்கரபாணி என்பவர் 2 வருடமாக டீ மற்றும் டிபன் கடை வைத்துள்ள நிலையில் அவர் அன்று இரவு சுமார் 8.30 மணியளவில் கடையில் வீட்டு சிலிண்டரிலிருந்து கடை சிலிண்டருக்கு கேஸ் மாற்றிய நிலையில் சிலிண்டரை அப்படியே வைத்துவிட்டு அவர் கடையை பூட்டிவிட்டு புதுப்பாளையத்தில் உள்ள அவரது வீட்டிற்கு சென்று விட்டார் என்றும், அவர் செல்லும் போது கடைக்கு வெளியில் உள்ள பெஞ்சில் வள்ளியப்பம்பட்டியை சேர்ந்த பெரியாகவுண்டர் மகன் கருப்பண்ணன் அதே ஊரை சேர்ந்த வீரப்பன் மகன் பெரியாகவுண்டர் மற்றும் பேளுக்குறிச்சி வெட்டுக்காட்டை சேர்ந்த வரதன் மகன் குப்புசாமி ஆகிய மூன்று பேரும் அமர்ந்திருந்தார்கள் என்றும், அப்போது கரண்ட் ஆப் ஆகிவிட்டு கரண்ட் திரும்ப வந்த போது கடைக்குள் கேஸ் மாற்றிய நிலையில் இருந்த சிலிண்டரிலிருந்து கேஸ் கசிவின் காரணமாகவும் மின் கசிவு காரணமாகவும் கடையின் உட்புறமாக சிலிண்டர் வெடித்து சிதறியதில் வெளியில் இருந்த மூன்று பேரும் இறந்து விட்டனர் என்றும் தெரிவித்தார்கள். நான் உடனடியாக கிராம நிர்வாக அலுவலரிடம் தகவல் கொடுத்துவிட்டு நானும் சம்பவ இடத்திற்கு நானும் கிராம நிர்வாக அலுவலருடன் சென்றேன். கிராம நிர்வாக அலுவலருடன் சம்பவ இடத்தை பார்த்தோம். அங்கு இருந்தவர்களிடம் கிராம நிர்வாக அலுவலர் விசாரித்தார். வீட்டு சிலிண்டரிலிருந்து கடை சிலிண்டருக்கு கேஸ் மாற்றிய நிலையில் கடை பூட்டி விட்டு சென்றதால் கேஸ் கசிவு ஏற்பட்டு கரண்ட் ஆப் ஆகி திரும்ப வந்தவுடன் சிலிண்டர் வெடித்து விபத்து நடந்ததாக சொன்னார்கள். பின்பு நானும்

கிராம நிர்வாக அலுவலரும் பரமத்தி காவல் நிலையம் சென்று கிராம நிர்வாக அலுவலர் புகார் கொடுத்தார். மறுநாள் காவல் ஆய்வாளர் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

எத்தனை மணிக்கு எனக்கு தகவல் கிடைத்தது என்றால் சம்பவம் நடந்து 10 நிமிடத்தில் எனக்கு தகவல் கிடைத்து விட்டது. எனக்கு தகவல் கொடுத்தவர் யார் என்று எனக்கு தெரியாது. நடந்த சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. தகவல் தெரிந்து சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு போனேன் என்று ஞாபகம் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு முதலில் போய்விட்டேன். கிராம நிர்வாக அலுவலர் வந்த பிறகு மீண்டும் அவருடன் போனேன். கிராம நிர்வாக அலுவலர் யார் யாரை சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. அக்கம் பக்கத்தார் சொன்னதன் அடிப்படையில் சம்பவம் எப்படி நடந்தது என்று தெரிந்து கொண்டேன்.

மறு விசாரணை : இல்லை.

Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 17 of 2021**

**Deposition of P.W.3 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : **திரு.சக்திவேல்** | Taluk | : |
| Father's/ Husband's Name | : காளியண்ணன் | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 4th day of September 2024.

(Accused absent. For Accused, petition U/s.317 Cr.P.C is filed and allowed.)

**முதல்நிலை விசாரணை**:

நான் மோகனூர் மெயின் ரோடு பேட்டபாளையத்தில் குடியிருந்து மினி ஆட்டோ வைத்து பால் லைன் எடுத்து தொழில் செய்து வருகிறேன். 25.1.2015ந் தேதி இரவு 8.15 மணிக்கு புதுப்பாளையம் வழியாக லைனில் பால் எடுப்பதற்காக கொங்கு வேபிரிட்ஜ் அருகே கொங்கு டிபன் சென்டரில் வண்டியை நிறுத்தி டீ சாப்பிட்டு கொண்டிருந்தேன். எதிர்புறம் சக்கரபாணி என்பவர் டீ மற்றும் ஹோட்டல் கடை வைத்திருந்தார். அந்த கடை மூடியிருந்தது. அந்த கடைக்கு வெளியே 2 பேர் உட்கார்ந்திருந்தார்கள். ஒருவர் நின்று கொண்டிருந்தார். 8.15 மணிக்கு கரண்ட் கட் ஆகி திரும்ப வந்த போது கடை வெடித்து சட்டர் வெளியே தூக்கி வீசப்பட்டது. அதில் கடைக்கு வெளியே இருந்த மூன்று பேரும் தூக்கி வீசப்பட்டது. அதில் ஒருவர் எனது ஆட்டோவிற்கு அடியில் வந்து விழுந்தார். அந்த கடையை பார்த்த போது பொருட்கள் எல்லாம் சிதறி கிடந்தது. எப்படி தீ பிடித்து கடை வெடித்தது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக மறுநாள் போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசார் விசாரிப்பதற்கு முன்பு சம்பவ இடத்திற்கு வந்து வேறு யாரும் விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது.

இந்நிலையில் இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞரால் அனுமதி வேண்டி அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவம் நடந்தவுடன் கிராம நிர்வாக அலுவலர், உதவியாளர் ஆகியோர் வந்து விசாரித்தார்கள் என்றால் கூட்டமாக இருந்ததால் யார் விசாரித்தார்கள் என்று தெரியவில்லை. நான் போலீசார் விசாரணையில் சம்பவத்திற்கு பிறகு கிராம நிர்வாக அலுவலர் அங்கு வந்து விசாரித்தார் என்றும், சம்பவம் நடந்தவுடன் வெடித்த கடைக்கு போய் பார்த்த போது கடையிலிருந்து லேசான கேஸ் நாற்றம் அடித்தது என்றும் கேஸ் மற்றும் ராடு சிலிண்டர், அடுப்பு எல்லாம் சிதறி கிடந்தது என்றும் கடைக்காரர்

சக்கரபாணி சிலிண்டரிலிருந்து கேஸ் மாற்றியதால் கேஸ் கசிந்து பின்பு கரண்ட் ஆப் ஆகி வந்தவுடன் கேஸ் சிலிண்டர் வெடித்து கடை இடிந்து அங்கு இருந்த மூன்று பேரும் இறந்துள்ளனர் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் ஞாபகம் இல்லை. வழக்கிலிருந்து எதிரியை காப்பாற்ற வேண்டி உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.

Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 17 of 2021**

**Deposition of P.W.4 witness for Prosecution**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **திரு.குமரவேல்** | Taluk | : | |
| Father's/ Husband's Name | : | | Calling | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 4th day of September 2024.

(Accused absent. For Accused, petition U/s.317 Cr.P.C is filed and allowed.)

**முதல்நிலை விசாரணை**:

நான் பரமத்தி வேலூர் புதுப்பாளையம் குடித்தெருவில் குடியிருந்து புதுப்பாளையம் கொங்கு வேபிரிட்ஜ் அருகே கொங்கு டிபன் சென்டர் என்ற பெயரில் தொழில் செய்து வருகிறேன். 25.1.2015ந் தேதி இரவு 8.30 மணிக்கு எதிர்புறம் உள்ள சக்கரபாணி கடையில் சம்பவம் நடந்தது. சம்பவம் நடந்த போது நான் எனது கடைக்குள் இருந்தேன். அப்போது எனக்கு கடையில் பால் ஆட்டோ ஓட்டும் சக்திவேல் டீ குடித்து கொண்டிருந்தார். சம்பவத்தின் போது சக்கரபாணி கடை பூட்டியிருந்தது. கடைக்கு வெளியே இரண்டு பேர் உட்கார்ந்திருந்தார்கள். ஒருவர் நின்று கொண்டிருந்தார். அப்போது கரண்ட் ஆப் ஆகி திரும்ப வந்த போது பயங்கர வெளிச்சம் மற்றும் சத்தத்துடன் சக்கரபாணி கடை வெடித்து சிதறி அங்கு இருந்த மூன்று பேரும் தூக்கி வீசப்பட்டு இறந்து விட்டார்கள். இறந்தவர்களில் ஒருவர் கருப்பண்ணன், மற்றொருவர் பெரியண்ணன் மற்றொரு நபர் பெயர் தெரியாது. அதன் பிறகு கிராம நிர்வாக அலுவலர் வந்து பார்த்து விட்டு அங்கிருந்தவர்களிடம் விசாரித்தார்கள். என்னிடமும் கேட்டார்கள். நான் 8.15 மணிக்கு விபத்து நடந்ததாக சொன்னேன். ஆய்வு செய்த போது சிலிண்டரில் கேஸ் மாற்றியதால் வெடித்ததாக தெரிய வந்தது. வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

இந்நிலையில் இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞரால் அனுமதி வேண்டி அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவம் நடந்தவுடன் சம்பவ நடந்த கடைக்கு சென்று பார்த்தேன் என்றும், கடையிலிருந்து லேசாக கேஸ் நாற்றம் அடித்தது என்றும் கேஸ் மாற்றும் ராடு சிலிண்டர் அடுப்பு எல்லாம் சிதறி கிடந்தது என்றும் கடைக்காரர் சக்கரபாணி சிலிண்டரிலிருந்து கேஸ் மாற்றியதால் கேஸ் கசிந்து கரண்ட் ஆப்

ஆகி திரும்ப வந்தவுடன் கேஸ் சிலிண்டர் வெடித்து சம்பவம் நடந்ததாக போலீசாரிடம் சொன்னேன் என்றால் சரிதான்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் சம்பவம் நடந்து 1 மணி நேரம் கழித்து சம்பவ நடந்த கடைக்கு சென்று பார்த்தேன். நான் கடைக்கு போய் பார்த்த போது போலீசாரும், கிராம நிர்வாக அலுவலரும் மற்றும் பொது மக்களும் இருந்தார்கள். சுமார் 50 நபர்களுக்கு மேல் இருந்தார்கள். போலீசார் வந்து ஆய்வு செய்து சொன்ன பிறகு தான் சம்பவம் எப்படி நடந்தது என்று தெரிய வந்தது என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. போலீசார் மற்றும் கிராம நிர்வாக அலுவலரிடம் சத்தம் கேட்ட பிறகு தான் சம்பவத்தை பற்றி தெரியும் என்றும் சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்று சொல்லியிருக்கிறேன்.

Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

## Sessions Case No. 17 of 2021

## Deposition of P.W.5 witness for Prosecution

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.வெண்ணிலா | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 4th day of September 2024.

(Accused absent. For Accused, petition U/s.317 Cr.P.C is filed and allowed.)

**முதல்நிலை விசாரணை**:

நான் மோகனூர் வட்டம் கே.புதுப்பாளையம் கொங்கு வேபிரிட்ஜ் எதிரில் குடியிருந்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னுடைய இடத்தில் முன்புறம் கடையும் பின்புறம் வீடும் உள்ளது. அந்த வீட்டில் தான் நான் குடியிருந்து வருகிறேன். முன்புறம் உள்ள எனது கடையை சக்கரபாணி என்பவர் வாடகைக்கு எடுத்து 2 வருடமாக டீ மற்றும் டிபன் கடை நடத்தி வந்தார். 25.1.2015ந் தேதி இரவு 8.15 மணிக்கு நான் எனது வீட்டில் இருந்தேன். அப்போது கடையை சாத்திவிட்டு சக்கரபாணி அவர் வீட்டிற்கு சென்று விட்டார். கடைக்கு வெளியே மூன்று பேர் இருந்தார்கள். கடையிலிருந்து பெரிய வெடி சத்தம் கேட்டதும் நான் வீட்டிலிருந்து வெளியே வந்து கடையை போய் பார்த்த போது கடை இடிந்து கிடந்தது. கடைக்கு வெளியே இருந்த மூன்று பேரும் இறந்து கிடந்தார்கள். கேஸ் சிலிண்டர் கசிவு ஏற்பட்டு கடை வெடித்து சிதறியதாக சொன்னார்கள். நான் கடை வெடித்ததில் என்னென்ன பொருட்கள் சிதறி கிடந்தது என்று பார்க்கவில்லை. கிராம நிர்வாக அலுவலரும் போலீசாரும் என்னை விசாரித்தார்கள்.

இந்நிலையில் இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞரால் அனுமதி வேண்டி அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவம் நடந்தவுடன் சம்பவ நடந்த கடைக்கு சென்று பார்த்தேன் என்றும், கடையிலிருந்து லேசாக கேஸ் நாற்றம் அடித்தது என்றும் கேஸ் மாற்றும் ராடு சிலிண்டர் அடுப்பு எல்லாம் சிதறி கிடந்தது என்றும் கடைக்காரர் சக்கரபாணி சிலிண்டரிலிருந்து கேஸ் மாற்றியதால் கேஸ் கசிந்து கரண்ட் ஆப் ஆகி திரும்ப வந்தவுடன் தீ பிடித்து கடை வெடித்து சம்பவம் நடந்ததாக போலீசாரிடம் சொன்னேன் என்றால் சரியல்ல. எனது கடையில் மின் இணைப்பு உள்ளது. சக்கரபாணி கேஸ் சிலிண்டரை கடையில்

உபயோகித்து வந்தார். சக்கரபாணியை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டி உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.

Judicial Form No.53<br>(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 17 of 2021**

**Deposition of P.W.6 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.கந்தசாமி | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 4th day of September 2024.

(Accused absent. For Accused, petition U/s.317 Cr.P.C is filed and allowed.)

**முதல்நிலை விசாரணை**:

நான் வள்ளியப்பம்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். 25.1.2015ந் தேதி இரவு 8.30 மணிக்கு வீட்டிலிருந்த போது தெற்கிலிருந்து வெடி சத்தம் கேட்டது. நான் போய் பார்த்த போது சக்கரபாணி டீ கடை வெடித்து சிதறி கிடந்தது. மூன்று பேர் இறந்து உடல் கிடந்தது. பின்பு வீட்டிற்கு சென்று விட்டேன். மறுநாள் காலை 6.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்த போது பரமத்தி காவல் ஆய்வாளர் வந்திருந்தார். சம்பவ இடத்தை பார்த்து படம் வரைந்தார். மகஜரில் சாட்சி கையெழுத்து போடுமாறு சொன்னார். நானும், சந்திரமோகனும் மகஜரில் சாட்சியாக கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 (அ.சா.6) ஆகும். அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு உடைந்து போன பொருட்களை போலீசார் கைப்பற்றி அதற்கான மகஜரில் நானும், சந்திரமோகனும் சாட்சியாக கையெழுத்து போட்டோம். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 (அ.சா.6) ஆகும். என்னென்ன பொருட்களை எடுத்து வந்தார்கள் என்று ஞாபகம் இல்லை. இவ்வழக்கு பற்றி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் கையெழுத்து போட்ட மகஜரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் சம்பவ இடம் வந்ததற்கு சாட்சி கையெழுத்து கேட்டார்கள் நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். சம்பவத்தை பற்றி கேட்ட போது சத்தம் கேட்டு போய் பார்த்தாக சொன்னேன். வேறு எதுவும் தெரியாது என்று சொன்னேன். நான் விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு போகவில்லை. சம்பவத்தில் இறந்து போன இரண்டு பேர் எங்கள் ஊர்காரர்கள். ஒருவர் வெளியூர்காரர். சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிடவில்லை என்றும் அங்கு வைத்து

எந்த ஆவணமும் தயார் செய்யவில்லை பொருட்கள் எதையும் கைப்பற்றவில்லை என்றும் இறந்து போனவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜர், கைப்பற்றுதல் மகஜரில் கையெழுத்து செய்துவிட்டு உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

## Sessions Case No. 17 of 2021

## Deposition of P.W.7 witness for Prosecution

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.சந்திரமோகன் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 4th day of September 2024.

(Accused absent. For Accused, petition U/s.317 Cr.P.C is filed and allowed.)

**முதல்நிலை விசாரணை**:

நான் பெரமாண்டபாளையத்தில் குடியிருந்து விவாசயம் செய்து வருகிறேன். 26.1.2015ந் தேதி காலை வள்ளிபுரம் டு வாழவந்தி மெயின் ரோட்டில் நாமக்கல் செல்வதற்காக போன போது முதல்நாள் இரவு சக்கரபாணி கடை வெடித்து சிதறியதாக கேள்வி பட்டேன். அன்று காலை 6.00 மணிக்கு நான் சம்பவ இடத்தில் இருந்த போது காவல் துறை அதிகாரி சம்பவ இடத்தை பார்த்து படம் வரைந்து கொண்டிருந்தார். சம்பவ இடத்தை பார்த்து படம் வரைந்ததற்காக சாட்சி கையெழுத்து கேட்டார்கள். இரண்டு கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்துகள் மட்டும் முறையே அ.சா.ஆ.4 மற்றும் 5 (அ.சா.7) ஆகும். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

இந்நிலையில் இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞரால் அனுமதி வேண்டி அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

காவல் ஆய்வாளர் என்னை விசாரித்த போது சம்பவ இடத்திலிருந்து சிலிண்டர் மாற்றும் ராடை கைப்பற்றினார்கள் என்றும் அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் கந்தசாமி என்பவரும் கையெழுத்து செய்தோம் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. சக்கரபாணி எனக்கு வேண்டியவர் என்பதால் அவரை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து போட்ட மகஜரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. சாட்சி கையெழுத்து கேட்டதால் போட்டேன். வழக்கு பற்றி எனக்கு வேறு எதுவும் தெரியாது.

Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 17 of 2021**

**Deposition of P.W.8 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : **திரு.அரவிந்த்குமார்** | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 4th day of September 2024.

(Accused absent. For Accused, petition U/s.317 Cr.P.C is filed and allowed.)

**முதல்நிலை விசாரணை**:

நான் எர்ணாபுரம் புதூரில் குடியிருந்து மெக்கானிக் தொழில் செய்து வருகிறேன். இறந்து போன பெரியாகவுண்டர் எனது தாத்தா ஆவார். 25.1.2015ந் தேதி இரவு 8.30 மணிக்கு எனது தாத்தாவும் கருப்பண்ணன் மற்றும் குப்புசாமி ஆகியோர் சக்கரபாணி என்பவர் டீ கடைக்கு வெளியே உட்கார்ந்திருந்த போது கடை தீடீரென வெடித்து அங்கிருந்த மூன்று பேரும் இறந்து விட்டதாக கேள்விபட்டேன். நான் 26.1.2015ந் தேதி காலை நாமக்கல் அரசு மருத்துவமனை சென்று எனது தாத்தா பெரியாகவுண்டர் பிரேதத்தை பார்த்த போது ஆய்வாளர் என் தாத்தா பிரேதத்தின் மீது 8.00 மணிக்கு பிரேத விசாரணை செய்த போது நானும் உடன் இருந்து சாட்சியம் அளித்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.